**Chenkaantal**
*A Bi-Yearly Peer-Reviewed Tamil Journal*

**Volume - 1, Special Issue - 1, January 2022** **E-ISSN: 2583-0481**

# Personality of Feminist Poets

**Dr.S.Marithangam**, Assistant Professor of Tamil, Wavoo Wajeeha Women's College, Kayalpatnam, Thoothukudi.
**ORCiD: https://orcid.org/0000-0003-4018-584X**
**DOI: 10.5281/zenodo.6622366**

## Abstract

*Literature is the mirror of time. Feminist poets expressed their personalities through literature. Tamil literature has lots of glimpses on it. They are efficient and are still manifesting today. They can be heroic, virtuous, or intellectual. This article sets out to explore how feminist poets in Sangam literature have expressed their personalities.*

**Keywords:** Feminist, Poets, Personality, Literature.

.

## References

[1] Nagarajan, V. *Kurunthogai.* Pavai Printers, Chennai.
[2] Avvai Duraisaami Pillai. *Purananooru*. Saiva Siththantha Nool Pathippu Kazhakam, Chennai.

**Author Contribution Statement:** NIL.
**Author Acknowledgement:** NIL.
**Author Declaration:** I declare that there is no competing interest in the content and authorship of this scholarly work.
The content of the article is licensed under https://creativecommons.org/licenses/by/4.0/ International License.

செங்காந்தள்

அறிஞர்களால் மதிப்பீடு செய்யப்படும் தமிழ் ஆய்விதழ்



மலர் - 1, சிறப்பிதழ் 1, தை 2053 இ - ஐ எஸ் எஸ் எண்: 2583-0481

# பெண்பாற் புலவர்களின் ஆளுமை

**முனைவர். சு. மாரித்தங்கம்**, உதவிப் பேராசிரியர், தமிழ்த்துறை,

வாவு வஜீஹா வனிதையா, கல்லூரி, காயல்பட்டணம், தூத்துக்குடி.

**ORCiD: https://orcid.org/0000-0003-4018-584X**

**DOI: 10.5281/zenodo.6622366**

**ஆய்வுச்சுருக்கம்**

*இலக்கியம் காலம் காட்டும் கண்ணாடி ஆகும். அவ்விலக்கியங்களில் காலத்திற்கு ஏற்றாற் போல் பல பெண்பாற் புலவர்கள் தங்களது ஆளுமையை வெளிப்படுத்தியுள்ளார்கள். தற்காலத்திலும் வெளிப்படுத்தி வருகிறார்கள். அவை வீரமாகவோ பண்பாகவோ அறிவாற்றலாகவோ எது வேண்டுமானாலும் இருக்கலாம்.இங்கு சங்க இலக்கியங்களில் உள்ள பெண்பாற் புலவர்கள் தங்களது ஆளுமையை எவ்வாறு வெளிப்படுத்தினர் என்பதை இக்கட்டுரை ஆராய்கிறது.*

**கருச் சொற்கள்:** இலக்கியம், பெண்பாற் புலவர்கள், ஆளுமை.

## முன்னுரை

ஏதேனும் இலக்கை எடுத்துரைப்பது இலக்கியம் ஆகும். மனித உள்ளத்தின் தன்மைகளை எடுத்துரைப்பது உளவியல் எனப்படும். ஆளுமை என்பதை ஆங்கிலத்தில் 'பர்சனாலிட்டி' என்ற கூறுவர். இது தனி மனிதனது உடல் தோற்றம்,அறிவாற்றல், கணங்கள், பண்புகள் முதலியவற்றின் அடிப்படையில் தீர்மானிக்கப்படுகிறது. சங்க இலக்கியங்களை உளவியல் இலக்கியம் என்கிறார் தமிழண்ணல். புலவர்களின் படைப்பாளுமை, தனிமனித ஆளுமை வளர்ச்சி, சமூக மேம்பாட்டிற்கான ஆளுமை வளர்ச்சி, பொருளாதார ஆளுமை வளர்ச்சி முதலியவற்றை சான்றாகக் கொண்டு அனைத்துக்கும் தமிழ் இலக்கியமே முன்னோடி என்பதை நினைவில் கொண்டு இக்கட்டுரையை ஆய்வு செய்வோம்.

## பெண்பாற் புலவர்கள்

பண்டைத் தமிழக மகளிர் சமுதாயத்தில் உயர்ந்த நிலையில் இருந்துள்ளனரா என்பதைத் தமிழ் இலக்கியங்கள் வாயிலாக அறியலாம். சங்க இலக்கியங்களில் 42 பெண்பாற் புலவர்கள் பாடிய பாடல்கள் இடம் பெற்றுள்ளன. அக்கால மகளிர் கல்வி கேள்விகளில் சிறந்து விளங்கினர். பெண் கல்வியில் சிறந்த நாடாக சங்ககாலத் தமிழகம் விளங்கியது. ஔவையார், பொன்முடியார், ஆதிமந்தியார், காக்கைப்பாடினியார், வெள்ளி வீதியார் முதலானோர் புலவர்களாக இருந்து இலக்கியத் தொண்டாற்றியுள்ளனர்.

## ஔவையார்

பாணர் குடியில் பிறந்த ஔவையார் அரசியல் ஆலோசகராகவும் தூது செல்பவராகவும் இருந்திருக்கிறார். ஆண்-பெண் நட்பிற்கு ஒரு முன்னோடியாக இருந்ததையும் காண முடிகிறது. ஒரு சமயம் தகடூர் மன்னன் அதியமானுக்கும் காஞ்சி மன்னன் தொண்டைமானுக்கும் இடையே கருத்து வேறுபாடு காரணமாகத் தொண்டைமான் அதியனின் மீது போர் தொடுக்க விழைந்தான். ஒயாது

போரில் ஈடுபட்டால் மக்கள் துன்புறுவர். இதனால் உள்நாட்டுக் குழப்பம் வறுமை ஏற்படும். இதனைத் தவிர்க்க அதியமான் ஔவையைத் தொண்டைமானிடம் தூது அனுப்பினான். தொண்டைமான் ஔவையை அன்புடன் வரவேற்று உபசரித்துத் தன் படைக்கலன்களைக் காண அழைத்துச் செல்கிறான். அவனது ஆணவத்தையும் அகங்காரத்தையும் உணா;ந்து கொண்ட ஔவை,

**"இல்லாயின் உடன் உண்ணும்**
**இல்லோர் ஒக்கல் தலைவன்**
**அண்ணல் எங்கோமான் வைந்நுதி வேலே" (புறம்: 95)**

என்கிறார். அரசே! உன்னுடைய படைக்கருவிகள் புத்தம் புதிதாக சுடர்விட்டுப் பிரகாசிக்கின்றன. ஆனால் அதியனின் வேற்படைகள் பழைய கருவிகளாகக் காட்சியளிக்கின்றன. அதியனது படைக்கருவிகள் பாதிநேரம் கொல்லன் பட்டறையில் பழுது பார்க்கச் சென்று விடுகின்றன என்று அவ்வரசனைப் புகழ்வது போலப் பழிக்கின்றார். இதைக்கேட்ட தொண்டைமான் தன் முடிவை மாற்றிக் கொள்கிறான். இரு மன்னர்;களுக்கிடையே போர் மூளக்கூடிய நேரத்தில் தூது சென்று போரைத் தடுப்பது என்பது எளிதான செயல் அன்று. அச்செயலைத் திறம்படச் செய்து முடித்த பெண்பாற் புலவரான ஔவை போற்றுதற்குரிய பெண்மணி ஆவார். வீரத்தில் தமது சிறப்புகளை வெளிப்படுத்திய ஔவை அகத்தில் ஆண்பாற்புலவா;கள் கூட ஒப்பிட முடியாத உணர்வுகளைக் காட்டியவர். தலைவன் பிரிவால் இரவு கண் அயராது விழித்திருக்கும் தலைவி தன் காதல் நோய் அறியாது உறங்கும் இவ்வுரையும் ஊராரையும் பார்த்துக் கூறும் வார்த்தைகள் ஔவையின் சொல்லாற்றலுக்கே உரியது.

**"முட்டு வேன்கொல் தாக்கு வேன் கொல்**
**ஓரேன் யானும் ஓர் பெற்றி மேலிட்டு**
**ஆஅ ஒல் எனக்கூவு வேன்கொல்**
**அலமரல் அசைவளி அலைப்ப என்**
**உயவு நோய் அறியாத துஞ்சும் ஊர்க்கே" (குறுந்.28)**

எனத் தலைவியின் மனநிலையை மிக அழகாகப் படம் பிடித்துக் காட்டியுள்ளார். எனவே அகத்திலும் புறத்திலும் ஔவையின் வாPகள் தனியங்கம் பிடித்துள்ளதை உணர முடிகிறது.

**பொன்முடியார்**

**"பால் கொண்டு மடப்பாவும் உண்ணா னாகலிற்**
**செறாஅ தோச்சிய சிறுகோ லஞ்சியோடு**
**...உன்னில னென்னும் புண்ணொன் றம்பு**
**மானுளை யன்ன குடுமித்**
**தோன்மிசைக் கிடந்த புல்லண லோனே" (புறம்: 310)**

என்ற பாடலில் போர் நடக்கிறது. போரில் எதிரி ஒருவனால் தன் படைக்கருவிகளை இழந்த நிலையில் ஒருவன் காணப்படுகிறான். நிராயுதபாணியாய் நிற்கும் அவன் தன் எதிரிகளை வீழ்த்தத் துடிக்கிறான். இறக்கும் தருவாயில் இருக்கும் அவ்வீரன் நான் இறப்பதற்கு முன் இவ்வேல்களைப் பார்த்திருக்கக்கூடாதா? அவற்றைக் கொண்டு எதிரிகளை வதைத்திருப்பேனே! என எண்ணி மருகுகிறான். இவ்வீரன் தனது இளம்பருவத்தில் எப்படியிருந்தான் என்றால் அவனுடைய தாயார் கிண்ணத்தில் பாலூற்றி எடுத்து வரும் போது அதை உண்ணாமல் அடம்பிடித்து நிற்கும் போது தாயார் அவனை அடிப்பதற்கு கொம்பை ஓங்கும் போது அஞ்சி நடுங்கியவனாம். ஆனால் இப்போது

போர்களத்தில் நின்று தன் உயிரை விடும் போதும் எதிர்த்துப் போரிடத் துணிகிறான். இவ்வாறு நாட்டுப்பற்றுடைய வீரம் செறிந்த கருத்தக்களைப் பாடியுள்ளார் பொன்முடியார்.

**ஆதி மந்தியார்**

சங்க காலத்துப் புகழ்பெற்ற பெண்பாற்புலவர்களுள் இவரும் ஒருவர் ஆவார் .சோழமன்னன் கரிகால்வளவனின் செல்வமகள் இவரை மணந்து கொண்டவன் சேரநாட்டு வஞ்சியின் மன்னன் ஆட்டனத்தி ஆவான். இவர் கற்பில் சிறந்தவர். ஆற்றில் அடித்துச் செல்லப்பட்ட தன் கணவனை தம் கற்புத்திறத்தால் உயிருடன் பெற்றவர். நொதுமலர் வரைவுழித் தோழிக்குத் தலைமகன் அறத்தொடு நின்றதைக் கூறுகிறார்.

**"மள்ளர் குழீஇய விழவி னானும்**
**மகளிர் தழீஇய துணங்கை யானும்**
**யாண்டுங் காணேன் மாண்தக் கோனை**
**யானும் ஒர் ஆடுகள மகளே என்கைக்**
**கோடுஈர் இலங்குவளை நெகிழ்த்**
**பீடுகெழு குரிசிலும் ஓர் ஆடுகள மகனே" (குறுந்: 31)**

எனத் தலைவியின் மனநிலையை அழகுற எடுத்துரைத்துள்ளார்.

**வெள்ளி வீதியார்**

பெண்பாற் புலவர் படைப்பில் இவரது படைப்புக்கு தனி இயல்பு உண்டு. தலைவனை அதாவது ஆடவனை மிகக் கடுமையாகச் சாடி உரைப்பது பெண் புலவரின் தனி இயல்பாகத் தொpய வருகிறது. ஆணைக் காட்டிலும் பெண்ணுக்கு நேர்முகமாகவோ மறைமுகமாகவோ முன்னிடம் கொடுப்பது பெண் கவிஞர்களிடம் இயல்பாக இருக்கும். அதிலும் இவர் பாடல்களில் நிறையவே இருக்கும். அவ்வகையில் இவரது அகப்பாடல்கள் பெரும்பாலானவை தலைவி தோழி செவிலி எனப் பெண்பால் கூற்றுக்களாகவே அமைந்திருக்கும். அதிலும் தலைவனைப் பிரிந்து வாடும் பெண்ணைப் பற்றிக்கொள்ளும் பசலை நோயை செழிப்புடன் காட்டியுள்ளார்.

**"ஞாயிறு காயும் வெவ்வறை மருங்கின்**
**கையில் ஊமன் கண்ணில் காக்கும்**
**வெண்ணெய் உணங்கல் போலப்**
**பரந்தன்று இந்நோய் நோன்று கொளற்கு அரிதே" (குறுந். 202)**

எனத் தலைவி கொண்ட காதல் நோய் வேதனையை சிறப்புடன் கூறியுள்ளார் காக்கைப்பாடினியார்.

**நச்செள்ளையார்**

நச்செள்ளையார் பெயரை ஆராயும் போது நச்செள்ளையார் என்பது இயற்பெயராகத் தோன்றுகிறது. செள்ளை என்ற இவர் தம் இயற்பெயருடன் நகரம் சேர்ந்து நச்செள்ளை ஆயிற்று. இவர் குறுந்தொகையில் காக்கை பற்றிப் பாடியதை ஒட்டி இவர் காக்கைப்பாடினி எனும் பெயர்; பெற்றார். பதிற்றுப்பத்தில் ஆடுகோட்பாட்டுச் சேரலாதனை இவர் பாடியதால் சேர நாட்டுப் புலவராகக் கருதத் தோன்றுகிறது. பொருள்வயின் பிரிந்துசென்ற தலைவனின் வருகைக்காக காத்திருந்த தலைவிக்கு காக்கை கரைதல் மூலம் குறிப்புணர்த்தி சிறப்பிடம் பெற்றவர்.

**"திண்தேர் நள்ளி கானத் தண்டா**
**பல்ஆ பயந்த நெய்யின் தொண்டி**

**முழுதுடன் விளைந்த வெண்ணெய் வெண்சோறு**
**எழுகலத்து ஏந்தினும் சிறிது என்தொழி**
**பெருந்தோள் நெகிழ்த்த செல்லற்கு**
**விரைந்துவரக் கரைந்த காக்கையது பலியே" (குறுந். 210)**

எனத் தலைவியின் மன ஒட்டத்தைத் தெளிவுடன் தம் பாடல் மூலம் படம் பிடித்துக் காட்டியுள்ளார்.

**பெருங்கோப்பெண்டு**

இவர் சங்ககாலப்புலவர்களில் ஒருவர் இவர் பூதப்பாண்டியனின் தேவியாவார். இவரது ஒரே ஒரு பாடல் புறநானூற்றில் இடம் பெற்றுள்ளது. ஒல்லையுர் தந்த பூதப்பாண்டியனும் ஒரு புலவராவர். பெருங்கோப்பெண்டு கணவனை இழந்து தீப்பாயச் சென்ற போது நேரில் கண்ட புலவ;ர் பேராலவாயார் இவர் பெருங்கோப்பெண்டு இளமையுடன் இருந்ததை புறம் 247 ஆம் பாடலில் கூறியுள்ளார். பகைவரை வெல்வேன் வெல்லாவிட்டால் இன்னது நிகழட்டும் என்று பூதப்பாண்டியன் பாடிய பாடல் ஒன்று புறநானூற்றில் உள்ளது. இந்தப் போரில் அவன் வெற்றி கண்டான் எனினும் அவன் பின்னர் மாண்டான். அப்போது தான் அவன் மனைவி பெருங்கோப்பெண்டு அவனது உடல் எரியும் தீயில் தானும் விழுந்து உயிர் துறந்தான். தீயில் விழப்போகும் போது பாடிய பாட்டுதான் இது.

**"…பெருந்தோள் கணவன் மாய்ந்தென அரும்பு அற**
**வள் இதழ் அவிழ்ந்த தாமரை**
**நள்இரும் பொய்கையும் தீயும் ஓரற்றே" (புறம். 246)**

இப்பாடலில் இவர் சொல்லும் செய்திகள் அக்காலத்தில் நிலவிய பெண்ணடிமைத்தனத்தை அறியச் செய்கிறது. மன்னனின் மனைவிக்கே கைம்மை நோன்பு இத்தனை கொடுமை தரும் எனில் பிற பெண்கள் எத்தகைய துன்பங்களை அனுபவித்திருப்பார்கள் என்ற ஒரு பெண்ணியக் கருத்தினை இவர் பதிவு செய்தள்ளார்.

**முடிவுரை**

சங்காலப் பெண்பாற் புலவர்கள் அக்காலச் சமுதாயத்தைத் தங்கள் பாடல்களில் படம்பிடித்துக் காட்டியுள்ளனர். அரசனுக்கு ஆலோசனைகள் கூறும் மந்திரியாகவும் தூது சென்று வெற்றியுடன் திரும்பும் மதிநுட்பம் கொண்ட தூதுவராகவும் புலமையுடன் சமுதாயத்தைத் திருத்தும் ஆளுமைத்திறன் கொண்டவராகவும் இருந்துள்ளனர் என்பதைத் தமிழ் இலக்கியங்கள் தெளிவாக எடுத்துரைக்கின்றன.

**துணை நூற்பட்டியல்**

[1] நாகராஜன், வீ. (உ.ஆ). *குறுந்தொகை*. பாவை பிரிண்டர்ஸ், சென்னை -14.
[2] ஔவை துரைசாமி பிள்ளை. *புறநானூறு*. சைவ சித்தாந்த கழகம், சென்னை -18.

**நிதிசார் கட்டுரையாளர் உறுதிமொழி:** இல்லை.
**கட்டுரையாளர் நன்றியுரை:** இல்லை.
**கட்டுரையாளர் உறுதிமொழி:** இக்கட்டுரையில் எவ்வித முரண்பாடும் இல்லை.

இக்கட்டுரை கிரியேட்டிவ் காமன்சு ஆட்ரிபியூசன் 4.0வின் https://creativecommons.org/licenses/by/4.0/ கீழ் பன்னாட்டு உரிமம் பெற்றுள்ளது.